**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வட மாகாணம்**
**மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016**
**செயன்முறைத் தொழிநுட்பத்திறன்**

தரம் - 09 நேரம் :- 2.00 மணி

சுட்டெண் :.......................................... புள்ளி :-

## பகுதி I

***மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.***

1. *இலங்கை ஒரு விவசாய நாடாக விளங்கி வருவதற்கான காரணம்.*
   1) *போதிய மனிதவளம் உண்டு*
   2) *நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது.*
   3) *உகந்த காலநிலையும் வளங்களும் காணப்படுகின்றது.*
   4) *தொழினுட்ப வசதிகள் காணப்படுகின்றமை.*

2. *நகரங்களிலும் நகரத்தை அண்டிய பிரதேசத்தில் வசிப்போர் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதில் உள்ள சிக்கல்.*
   1) *போதியளவு இடவசதி காணப்படல்*
   2) *சூரியஒளி அதிகமாகக் கிடைத்தல்.*
   3) *தொழினுட்ப வளர்ச்சி உயர்வாக காணப்படல்.*
   4) *மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பை கொண்டிருத்தல்.*

3. *சோல்ற் வேலி அமைக்கப்படுவதன் பிரதான காரணம்.*
   1) *பயிர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்* 2) *மண்ணரிப்பு தடுக்கப்படும்*
   3) *மண்ணின் ஈரலிப்பு பேணப்படும்* 4) *வெள்ளப்பெருக்கை தடை செய்யும்*

4. *தொல்லை தரும் பயிர்ப்பீடைகளாவன.*
   1) *நத்தை, வௌவால்* 2) *வௌவால், செண்பகம்*
   3) *செண்பகம், மண்புழு* 4) *நத்தை, மண்புழு*

5. *உணவுக் கூம்பகத்தின் உச்சியில் காணப்படும் உணவுப்பொருட்கள்*
   i. *பருப்பும், பாலுணவுகளும்* ii. *விலங்குணவும், மரக்கறிகளும்*
   iii. *சீனியும், பழங்களும்* iv. *எண்ணையும் சீனியுணவுகளும்*

6. *தவறான உணவுப்பழக்கவழக்கங்களால் ஏற்படும் நோய்களில் ஒன்று*
   i. *தலையிடி* ii. *மனநோய்* iii. *ஒவ்வாமை* iv. *கண்நோய்*

7. *பெயர்ஸ் (சிலோன் அப்பிள்) அதிகளவில் கிடைக்கும் மாகாணம்.*
   i. *வடமத்திய மாகாணம்* ii. *மத்திய மாகாணம்*
   iii. *ஊவா மாகாணம்* iv. *தென் மாகாணம்*



kalvi.lk

8. பாலை உறையச் செய்யும் பற்றீரியா வகைகள்

i. லக்ரோபசிலஸ் ii. பக்றீரியா iii. அமீபா iv. வைரஸ்

9. எரிவாயு அடுப்பின் எரிபொருளாக பயன்படுவது.

i. நைதரசன் வாயு ii. திரவ பெற்றோலிய வாயு iii. ஐதரசன் வாயு iv. ஒட்சிசன்

10. அமுக்க அடுப்பை பயன்படுத்துவதனால் கிடைக்கும் அனுகூலங்கள்

i. வெப்பசக்தி வீணாவது குறைவு ii. எரிபொருட் செலவு குறைவு

iii. குறைந்த நேரத்தில் சமைக்கலாம் iv. மேற்கூறிய யாவும்

11. கலக்கும் / அரைக்கும் உபகரணத்தை இயக்க வேண்டிய சரியான முறை ஒன்று.

i. முதல் 60 நிமிடங்கள் வரை தொடர்ச்சியாக இயக்குதல்.

ii. 30 நிமிடங்களுக்கொரு தடவை நிறுத்தி போடுதல்.

iii. 2 நிமிடங்களுக்கொரு தடவை நிறுத்தி போடுதல் தொடர்ச்சியாக 4 நிமிடங்கள் இயங்காது இருப்பதை கவனித்தல்.

iv. உபகரணத்தை இயக்கிய பின்பே அதனுள் பொருளை இட வேண்டும்.

12. அதிகளவு மூலதனம் தேவைப்படாத வணிக முறை எது?

i. நடுத்தர அளவு வணிகம் ii. சிற்றளவான வணிகம்

iii. பாரிய அளவு வணிகம் iv. மேற்கூறிய யாவும்

13. பயிர்ச்செய்கையில் களையானின் பாதிப்பைக் குறைக்க பயன்படுத்தும் இரசாயன பொருள்.

i. குளோரிபைரிபொஸ் ii. பொஸ்பேரா iii. குளோரோ iv. பொரிபொஸ்

14. பசுப்பாலை அடுப்பில் அதிகநேரம் சூடாக்குவதனால் கிடைக்கும் விளைவு.

i. பாலின் சுவை அதிகரிக்கும் ii. பாலின் நிறம் மாறும்

iii. பால்கட்டியாகி அதிலுள்ள புரதம் அழியும் iv. பாலின் தடிப்பு குறைவடையும்

15. "சுவாலை வழங்கி" ஒரு பகுதியாக அமைந்துள்ள சமையலறை உபகரணம்.

i. மின்கேற்றல் ii. முட்டையடி கருவி iii. எரிவாயு அடுப்பு iv. அரைப்பான்

16. வெறுப்பூட்டும் பயிர் வகை எது?

i. செவ்வந்தி ii. பூவரசு iii. வேம்பு iv. அலரி

17. அமுக்க அடுப்பில் விசில் ஒலியுடன் குழாயின் மூலம் நீராவி வெளியேறும் பகுதி எவ்வாறு அழைக்கப்படும்.

i. நீராவி வெளியேற்றும் குழாய் ii. பாதுகாப்பு மூடி

iii. திருகாணி iv. திணிவு வால்வு

18. பல் தொழில்பாட்டு உபகரணமாக அமைவது.

i. துருவலை ii. கத்தி iii. அரைக்கும் உபகரணம் iv. மின்விசிறி

19. மண்ணை வளப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் மரங்களாவன.

i. வேம்பு, சவுக்கு ii. சிற்றகத்தி, மா iii. மா, பலா iv. வேம்பு, தென்னை



kalvi.lk

20. கைத்தொழில் வகைக்குள் அடங்கும் தொழில் வகை ஒன்று

i. வீடு கட்டுதல் ii. வயல் உழுதல் iii. மட்பாண்டம் செய்தல் iv. ஆசிரியர்

21. எமது நீண்ட ஆரோக்கிய வாழ்விற்கு அத்தியவசியமானது.

i. ஆடம்பர வாழ்க்கை ii. மனத்திருப்தி

iii. போசணைமிக்க உணவு iv. சிறந்த தொழில்

22. இறைச்சி, இறைச்சி உற்பத்திகளை உணவாக உட்கொள்வதால்

i. உடலுக்கு பாதுகாப்பு கிடைத்தல் ii. உடலுக்கு சக்தி கிடைத்தல்

iii. உடலுக்கு வளர்ச்சி கிடைத்தல் iv. உடல் அழகு பெறல்

23. சீனி அதிகமாக உள்ள உணவுப் பொருள்களை அளவுக்கதிகமாக உண்பதால் ஏற்படக்கூடிய நோய்.

i. நீரிழிவு ii. வயிற்றோட்டம் iii. இரத்த அழுத்தம் iv. மலச்சிக்கல்

24. பாலும் பாலுற்பத்தி பொருட்களில் காணப்படும் கனிப்பொருள்

i. இரும்பு ii. அயடீன் iii. கல்சியம் iv. சோடியம்

25. சோல்ற் வேலி அமைப்பதற்கு பயன்படும் தாவரம்

i. பூவரசு ii. ஆமணக்கு iii. கிளிசரியா iv. தேக்கு

26. அரிமரமாக பயன்படுத்த முடியாதது.

i. தேமா ii. சமண்டலை iii. வேம்பு iv. முதிரை

27. கோபுர பயிர்ச்செய்கை முறையில் வளர்க்கக்கூடிய தாவரம்

i. புடோல் ii. பாகல் iii. வெண்டி iv. பசளி

28. பொதியிடல் மூலம் பெறப்படும் அனுகூலங்களில் ஒன்றாகக் கருதப்படுவது.

i. உற்பத்திப் பொருள் பாதுகாப்பு ii. நுகர்வு குறைவடைதல்

iii. உற்பத்தி குறைவடைதல் iv. தரம் குறையும்

29. பண்ணைக் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படுவது.

i. எண்ணெய் உற்பத்தி ii. கூட்டெரு iii. அசேதன பசளை iv. மின்சாரம்

30. பெரோமோன் பொறியின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய பீடை.

i. வயல் எலி ii. நத்தை iii. பழ ஈ iv. தேனீ

**(30 புள்ளிகள்)**



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

## பகுதி II

***விரும்பிய 3 வினாக்களுக்கு விடை தருக.***

*01)*

1. ***தாவரங்களில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் பிரதான பயன்கள் 3 தருக.***
2. ***பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்தல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் 3 தருக.***
3. ***தாவரங்களில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் சூழல் ரீதியான பயன்கள் 3 தருக.***
4. *மண்ணை விருத்தி செய்தல் தொடர்பாக தாவரங்கள் கொண்டுள்ள இயல்புகள் 3 தருக.*
5. *பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய நுட்பமுறைகள் 3 தருக.*

(5 x 3 = 15 *புள்ளி)*

*02)*

1. *விவசாய வனவளர்ப்பு என்றால் என்ன?* *(3 புள்ளி)*
2. *விவசாய வனவளர்ப்பை மேற்கொள்ளும் போது பின்பற்றும் மூன்று அடிப்படை விடயங்களும் எவை?*

   *(3 புள்ளி)*
3. *பீடைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள எம் முன்னோர்கள் மேற்கொண்ட முறைகள் எவை?*

   *(3 புள்ளி)*
4. *நீர் வெருட்டியை (தியகொல்மன) படம் மூலம் வரைந்து விளக்குக.* *(6 புள்ளி)*

*(படம் 3 புள்ளி) விளக்கம் 3 புள்ளி = 6) (15 புள்ளி)*

*03)*

1. *விலங்குணவைப் போன்று உயர்புரதங்களைத் தரக்கூடிய தாவர புரத உணவுகள் 3 குறிப்பிடுக.*
2. *கைத்தொழில் என்றால் என்ன?*
3. *கட்டிளமைப் பருவத்தினருக்குரிய போசணைமிக்க மதிய உணவு வேளையைத் திட்டமிடுக.?*
4. *வணிக முயற்சித் திட்டத்தில் உள்ளடங்கப்பட வேண்டிய விடயங்கள் 3 தருக.*
5. *நிதிசார ஊக்குவிப்புக்களை வணிகர்களுக்கு வழங்கும் நிதி நிறுவனங்கள் 3 தருக.*

(5x3=15 *புள்ளி)*

*04)*

1. *அமுக்க அடுப்பினை வரைந்து பிரதான 5 பாகங்களை குறிப்பிடுக.*

   ***(படம் - 3 புள்ளி, குறித்தல் - 2 புள்ளி = 5 புள்ளி)***
2. *எரிவாயு அடுப்பின் வினைத்திறன் குறைவடைவதற்கான காரணங்கள் 3 தருக.*
3. *அமுக்க அடுப்பில் நீராவி வெளியேறும் குழாயின் பயன்பாடு யாது?*
4. *கலக்கும் அரைக்கும் உபகரணத்தை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக.*
5. *எரிவாயு அடுப்பிற்கு வாயு வழங்கும் சிலிண்டரில் இருந்து வாயுக்கசிவு ஏற்படுமிடுத்து நீர் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 3 தருக.* ***(15 புள்ளிகள்)***



kalvi.lk

*05)*

1. *சிற்றளவான வணிகங்களை பெரும் முயற்சியாளர்கள் தெரிவுசெய்வதற்கான காரணங்கள் 3 தருக.*
2. *நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் சிற்றளவிலான வணிகங்களின் முக்கியத்துவம் யாது?*
3. *தனிப்பட்ட சேமிப்புக்களை முதலீடு செய்யக்கூடிய மாற்றுவழிகள் 3 தருக.*
4. *சிற்றளவான வணிகர்கள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் 3 தருக.*
5. *வணிக நடவடிக்கைகளில் களஞ்சியப்படுத்தல் சேவை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது 3 காரணங்கள் தருக.* **(5 x 3 = 15 *புள்ளிகள்*)**

Education
கல்வி
අධ්‍යාපන

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**